உ

கடவுள் துணை

# செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி—ருஉ.] மன்மதஞு—மாசிமீ [பகுதி—ச,
Vol. 52. February-March—1956. No. 4.

உள்ளுறை

அருள் மொழி: 2 97
டாக்டர் மா. இராசமாணிக்கனார்

உழைப்பும் உயர்வும்: 105
த. கண்ணம்மாள்

அழகோ அழகு } 111
சிலம்பும் சமுதாயமும் } 115
மா. ரா. இளங்கோவன்

மாம்பழக்கவி—சில பாடல்கள்: 2 123
பண்டித. ரா. திம்மப்பையர்

தமிழர் சமயம்: 126
ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணு—8.
வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1956.

# "செந்தமிழ்" ஆசிரியர் குழு:

1. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளை
தியாகராசர் கல்லூரி, மதுரை. (தலைவர்)

2. திரு. பேராசிரியர், செங்காவலர், ஆ. கார்மேகக்கோனார், மதுரை.

3. டாக்டர். மா. இராசமாணிக்கனார் M. A. M. O. L. L. T Ph. D.
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

4. திரு. பேராசிரியர், பி. ஜோதிமுத்து M. A., B. D.
தமிழ்த்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

5. திரு. நா. அப்பனையங்கார், ஆசிரியர், தமிழ்ச் சங்கம், மதுரை.

6. திரு. முகம்மது சுல்தான் அவர்கள், M. A. B. L.
வழக்குரைஞர்-மதுரை.

7. திரு. வி சண்முகசுந்தரம் அவர்கள், M. A. B. L.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம்,
அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

8. திரு. சி. பழநியப்பன் அவர்கள்.
தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை.

உ

கடவுள் துணை

# செந்தமிழ்

[தொகுதி—௫௨.] மன்மத௵—மாசி௴ [பகுதி—௪.

Vol. 52. February-March—1956. No. 4.

## அருள் மொழி—2

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள், தமிழ்ப் பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

### சமயம் என்பது யாது?

மனிதர் உலகில் நேர்மையாக வாழ்வதற்குரிய பாதையை வகுத்துக் கூறும் கருத்துக்களின் திரட்சியே மதம் அல்லது சமயம் என்று சொல்லப்படும் என்பது விவேகானந்தர் அருள்மொழி. எனவே, உலகத்தைப் படைத்த பேராற்றல் ஒன்று உண்டு என்பதை உளங்கொண்டு, தன் உள்ளொளி தெளிவாகத் தெரிவிக்கும் குற்றமற்ற பாதையில் வாழ்பவன் சமயத்தைப் பின்பற்றுபவன் எனப்படுவான். அப் பரம்பொருளைச் சிவனாகக் கொண்டவன் சைவன் என்றும், விஷ்ணுவாகக் கொண்டவன வைணவன் என்றும், பரமபிதவாகக் கொண்டவன் கிறித்தவன் என்றும், அல்லாஹ் என்று நினைப்பவன் முசுலிம் என்றும் பெயர் பெறுவர். இவ்வாறு பலசமயத்தவர் தத்தம் சமயக் கொள்கைகளைப் பின்பற்றினாலும் இவர் அனைவரும் வழிபடும் கடவுள் ஒன்றே, பெயர்களே வேறுபடுவன; சமய பழக்க வழக்கங்கள் சிலவே வேறுபடுகின்றன. வாழ்வின் எல்லாத் துறைகளிலும் இவ் வெல்லாச் சமயத்தவரும் ஒன்றுபட்டே இருக்கின்றனர். இந்த உண்மையைத் தாமாகச் சிந்திக்கும் அறிவுடையோர் நன்கு அறிவர். ஆதலால் அப்பெருமக்கள் எல்லாச் சமயங்களையும் ஒன்று

போலவே கருதவர்; ஒருநகரத்தை அடையப் பலவழிகள் இருப்பது போலப் பரம்பொருளை உணர்த்தப் பலவழிகள், பலசமயங்கள் இருக்கின்றன என்னும் உண்மையை உணர்வர். இவ்வுண்மைகளைத் தாமே சிந்திக்கும் ஆற்றலில்லாத சாதாரணமக்களே சமயவாதுகளிலும், கடவுளர் போராட்டங்களிலும் ஈடுபட்டுச் சமுதாய அமைதியைக் குலைப்பர்.

சமயத்தின் இலக்கணத்தை நன்கு அறிந்தும், பொதுமக்களின் அறியாமையையும் மூடபக்தியையும் அடிப்படையாக வைத்துப் பற்பல சமயப்பூச்சுடைய கற்பனைக்கதைகளைக் கட்டிவிட்டுச் சிலர் சமய வாணிகம் செய்து வாழ்வுநடாத்துவர். அவர் தம்பிழைப்புக்காகவே விழாக்களும், பூசனைகளும், பிறவும் நாளடைவில் கோவில்களிலும், வீடுகளிலும் மலிந்துவிட்டன. ஒவ்வொரு வீட்டிலும் பலவகை நோன்புகள் தோன்றிவிட்டன. ஒருவன் பிறந்தது முதல் இறக்கும் வரையிலும் பலவகைச் சடங்குகளைச் செய்யத் தூண்டப்படுகிறான். அவன் இறந்ததும் அவனுக்காக அவன்மகன் தான் இறக்கும்வரையில் திதி, மாசியம், கருமாதி முதலியவற்றின் பெயரால் பல சடங்குகளைச் செய்ய வேண்டுபவனாகிறான். இவைஎல்லாம் இன்னின்ன பயன்களைத் தரும் என்று நூல்களில் எழுதப்பட்டுள்ளன. இவற்றின் உண்மையை அறிந்தவர் எவருமில்லை. ஆயினும், மக்கள் நம்பிக்கையால் இவற்றைச் செய்கின்றனர். பிறசமயங்களில் பெரும்பாலும் இச்சடங்குகள் இல்லை. இவற்றைச் செய்யாத பிறசமயத்தார் நரகத்திற்குச் செல்லுகின்றனரா? சென்றனரா? அங்ஙனமாயின் உலகமக்களுள் பெரும்பாலோர் (இறந்தவர்) நரகத்தில் அல்லவா இருக்க வேண்டும்? இவற்றை அறிவற்ற பாமரமக்கள் எண்ணுவதில்லை. ஏசுநாதரால் கண்டிக்கப்பட்ட ஆயக்காரர் போன்ற புரோகிதரும், பூசாரிகளும் சைவ, வைணவ மக்களைத் தங்கள் வாழ்வுக்காகச் சமயத்துறையில் முழுமூடர்களாக ஆக்கிவைத்துள்ளனர் என்று கூறுதல் தவறாகாது.

## தத்துவ அறிஞர் கூற்று

“சமுதாய நலத்துக்காக ஒவ்வொருவனையும் உழைக்கத் தூண்டுவதும் உயர்ந்தவாழ்க்கையை நடத்தவழிகோலுவதும் சமயம் ஆகும். மிகுதியான கொள்கைகளையும், சடங்குகளையும் புகுத்துவதையோ,

சமுதாயத்தைப் பிளவுபடுத்துவதையோ சமயம்என்று கூறமுடியாது. சாதி, இனம், நிறம் என்ற வேறுபாடுகட்கு மேலோங்கி நிற்பது தான் உண்மைச் சமயம் என்பது.”

இஃது இந்திய அரசாங்கத்தின் துணைத்தலைவரும், சிறந்த தத்துவ அறிஞரும் ஆகிய டாக்டர் சர். எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களது பேச்சாகும்.

இவ்வறிஞர் உலக தத்துவசாஸ்திரப் பேராசிரியர்கள் நலைசிறந்தவர்; உலகத்துச் சமயநூலகள் எல்லாவற்றையும் நன்கு கற்றவர்; தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றியவர்; எண்ணிறந்த சமயதத்துவ மாநாடுகளில் சமயதத்துவ முழக்கம் செய்தவர். ‘சமுதாயத்தைப் பிளவுபடுத்துவது சமயம் ஆகாது’ என்று இவர் கூறுவது ஆழ்ந்து கவனிக்கத்தக்கது. எண்ணிறந்த சாதிகளைக்கொண்டது இந்துசமயம் என்றால், அச்சாதிகள் இருக்கும் வரையில் இந்துமதம் மதமாகாது என்பது இவர் கூற்றால் பெறப்படும் உண்மை ஆகும். அவ்வாறே பல சடங்குகளைப் புகுத்துவதும் சமயம் ஆகாது. இக்கூற்றை அறிவுடையோர் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

இதே அறிஞர் மேலும் சில உண்மைகளைக் கீழ்வருமாறு கூறுகின்றார்:

“வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் மனித இனம் தான் கண்ட அறிவுதான் முடிவானது என்ற மயக்கத்தில் இருந்தது. இந்த மயக்கத்தால் பொறுமையும், வெறுப்பும் வளர்ந்தன. ‘பரம்பரை மதக்கோட்பாடுகளின் பிடிப்பு’ என்னும் நோயால் இந்த உலகம் வருந்தியுள்ளது.”

இப்பொன்னுரை ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. தமிழகத்தில் உண்டான சமண-பௌத்த போராட்டங்களும, சைவ-வைணவப் போராட்டங்களும் இவற்றின் விளைவுகளும் ஆழ்ந்து சிந்திக்கவேண்டியவை. ஒவ்வொரு சமயத்தையும் சிறுமையாக எண்ணித் தம் சமயமே உயர்ந்தது என்று வாதிடும் நீலகேசி போன்ற நூற்பொருள்கள் இராதாகிருஷ்ணன் கூற்றை மெய்ப்பிக்கின்றன. ஒரு சமயத்தார் மற்றொரு சமயத்தாரைக் கழுவேற்றியதும், பிறகொடுமைகள் செய்த

தம்—தான்கண்ட அறிவுதான் முடிவானது என்ற மயக்க உணர்ச்சியின் விளைவாகும். இச்சமயக்கொடுமைகளாலும் இந்நாட்டில் சமுதாய வாழ்க்கை அமைதியை இழந்தது. சமணரைச் சைவர் அழித்தனர்; ஒருவர் கோவில்களை மற்றவர் அழித்தனர். இவ்வாறே இந்நாட்டுக்கு வந்த வேற்றுச்சமயத்தினரும் இச்சமயக்கிளர்ச்சியை வளர்த்தனர்; கோவில் செல்வத்தைக் கொள்ளைகொண்டனர். இத்தகைய இழி செயல்களால் வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் சமுதாயம் அமைதி இழந்து அல்லற்பட்டது.

## அருள்மொழி

"நம் கோட்பாடுகள் எல்லாம் சத்தியத்தை நோக்கிச் செல்கின்றனவேயொழிய, முற்றிலும் சத்தியமானவை என்று கூறிவிடமுடியாது என்பதை உணர்ந்தால், இன்னும் அதிக சத்தியத்தைப் போதிக்கக்கூடிய பிறதத்துவங்களை நாம் காணும்போது, நம் கோட்பாடுகளைத் திருத்திவைத்துக்கொள்ளத் தயாராகிவிடுவோம். ஆகவே, இந்நிலையில் எந்த ஞானதத்துவமும் அதிகாரபூர்வமானதோ, கட்டாயமாக மனிதர் எல்லோரும் பின்பற்றவேண்டும் என்று கூறக்கூடியபடி முடிவானதோ அல்ல."

டாக்டர் இராதாகிருஷ்ணனது இந்த அறிவுரை ஒவ்வொரு சமயத்தாரது அகக்கண்களையும் நன்கு திறக்க வல்லது. இந்த உண்மை உணரப்படுமாயின், ஒவ்வொருசமயத்தாரும் பிறரும் சமய உண்மைகளை அறிந்து பயன்பெற முற்படுவர். இதனால் சமயவெறி நீங்கும்; எதிலும் உண்மைகாணும் ஆர்வம் பிறக்கும்; எல்லாச் சமயங்களையும் மதித்துநடக்க மனம் இடமதரும்.

"உலகம் உருப்பட வேண்டுமானால், எல்லோருக்கும் ஆத்மீக ஒருமைப்பாடு தேவை. ஆதலால் மனிதஇனம் உலக ஒற்றுமையைக் கருதி, தன்சிந்தனையின அடிப்படையையும் வாழ்க்கையின் அடிப்படையையும் மாற்றிக்கொள்ள வேண்டும்."

இதுவும் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களது அருள் மொழியாகும். இதன்சுருக்கமே நம் பழந்தமிழ்ப்புலவர் ஒருவரால் இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்று

கூறப்பட்டது. இப்பொன்னுரை உள்ளத்தில் நன்கு பதியுமாயின், சாதிப்பூசலுக்கு இடமில்லை; சமயவெறிக்கு இடமில்லை; உயர்வு தாழ்வு முதலிய வேறுபாடுகட்குச் சிறிதும் இடமில்லை; இந்நிலை மலரப்பெற்ற சமுதாயமே உண்மைச் சமயத்தைப் பின்பற்றும் அறிவுடைய சமுதாயமாகும். இதற்குஉரிய பரந்தஎண்ணமும், விரிந்த நோக்கமும நம்மிடையே மலர்தல் வேண்டும்.

## சமயவெறி

நாட்டுவரலாற்றை நன்கு கவனிப்போமாயின் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொருசமயமும் தன்செல்வாக்கை நிலைநாட்டப் பிறசமயங்களை ஒடுக்க முயன்றதும், சமயப் போராட்டங்கள் நிகழ்ந்ததும் அறியலாம். இதனால் மக்கள்கண்ட பயன் யாது? சமணர்க்கும் பௌத்தர்க்கும் ஓயாத சமயவாதங்கள் நடைபெற்றன. பலர்பார்க்கத் தக்க இடத்தில் நாவல்மரக்கிளையை நட்டுச் சமயவாதிகளை வாதுக்கழைப்பது, வாதில் தோற்றவர் வென்ற சமயத்தைத் தழுவுவது வழக்கம் என்பது குண்டலகேசி—நீலகேசி வரலாறுகள் தெரிவிக்கின்றன. சைவரான சம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்குச் சமணர்கள் தீவைத்துவிட்டனர். சைவர்களிடம் சமணர்கள் வாதில் தோற்றமையால் கழுவேறினர், அல்லது ஏற்றப்பட்டனர் என்பதை அறிகின்றோம்.

“வெறுப்பொடு சமணர் மிண்டர் விதியில்சாக் கியர்கள் நின்பால்
பொறுப்பரி யனகள் பேசில், போவதே நோய தாகி,
குறிப்பெனக் கடையு மாகில் கூடுமேல் தலையை ஆங்கே
அறுப்பதே கருமங் கண்டாய் அரங்கமா நகரு ளானே”

என்பது தொண்டரடிப்பொடியாழ்வார் பாசுரமாகும். திருஞானசம்பந்தர் ஒவ்வொரு திருப்பதிகத்திலும் பௌத்தரையும் சமணரையும் வன்மையாகக் கண்டித்துள்ளதைக் காணலாம். பல்லவ அரசனான இரண்டாம் நந்திவர்மன் பௌத்தரையோ சமணரையோ கழுவேற்றியதாகக் காஞ்சி வைகுந்தப்பெருமாள் கோவிலில் சிற்பம் காணப்படுகிறது. அப்பெருவேந்தன் அப்புறச்சமயத்தார் நிலங்களைப் பறிமுதல் செய்து வைதிகர்க்கு அளித்தான் என்று அவனது செப்புப் பட்டயம் செப்புகின்றது.

பிற்காலச் சோழர் காலத்தில் சைவமும் வைணவமும் ஒன்றை யொன்று தாக்கிக்கொண்டன. சிவன் கோவிலைக் கண்காணிக்கும் மாகேசுவரர்கள், வைணவருடன் தொடர்பு வைத்துக்கொள்ளல் ஆகாது. அங்ஙனம் வைத்துக்கொண்டால் மாகேசுவர பதவியினின் றும் நீக்கப்படுவர்; என்று திருக்கடவூர்ச் சிவன்கோவில் மாகேசுவரர் செய்த தீர்மானத்தை அக்கோவில் கல்வெட்டு ஒன்று குறிக்கின்றது. அதிராசேந்திரன் அல்லது முதற் குலோத்துங்கன் காலத்தில் சிறந்த வைணவ ஆச்சாரியரான இராமாநுசர் சைவர் கொடுமைக்கு ஆற்றாது சோழநாட்டைவிட்டு மைசூர் நாட்டிற்குச் சென்றுவிட்டார் என்பது வரலாறு கண்ட உண்மை.

கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இரண்டாம் குலோத்துங் கன் தில்லைக்கூத்தப் பெருமானுக்கு முன்பு வைக்கப்பட்டிருந்த கோவிந்தராசர் சிலையைக் கடலில் எறிந்துவிட்டான் என்பதைத் தில்லைக் கல்வெட்டும், ஆடுதுறைக் கல்வெட்டும், குலோத்துங்கன் உலாவும் அறிவிக்கின்றன. "மாலும் நான்முகனும் காணாத சிவன்", என்னும் கருத்தை ஏறத்தாழ முன்னூறு இடங்களில் சேக்கிழார் பெருமான் தமது பெரியபுராணத்தில் கூறிச்சென்றனர்.

இதுகாறும் கூறப்பெற்றவை அனைத்தும், தத்தம் சமயமே உண்மைச்சமயம்-பயன்தரும்சமயம் என்று மக்கள்கொண்ட நம்பிக் கையால் சமுதாயத்திற்கு விளைந்த கேடுகள் ஆகும். இவர்கள் வாழ் ந்த காலத்தைச் "சமயகாலம்" என்று கூறுவதைவிட, "சமயவெறி கொண்டகாலம்" என்று கூறுவதே ஏற்றதன்றோ?

தென்னிந்திய வரலாற்றில் சைவர், வைணவர், வைதிகர் என் போர் சேர்ந்து பௌத்தத்தையும் சமணத்தையும் ஒடுக்கினர். பின்பு சைவரும் வைணவரும் ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டனர். பின்பு முஸ்லிம்கள் படையெடுப்பிலும் ஆட்சியிலும் சைவரும் வைண வரும் ஒடுக்கப்பட்டனர். "வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்ற பழமொழிக்கேற்ப, ஒவ்வொரு சமயத்தாரும் தம் விதைப்புக் கேற்ற பயனை அடைந்தனர் என்பது வரலாறு கண்ட உண்மை. ஏன் இக்கேடுகள் சமுதாயத்தில் நடைபெறவேண்டும்?

"வரலாற்றின் ஒவ்வோரு கட்டத்திலும் மனித இனம் தான் கண்ட அறிவுதான் முடிவானது என்ற மயக்கத்தில் இருந்தது. இந்த மயக்கத்தால் பொறுமையும் வெறுப்பும் வளர்ந்தன. 'பரம்பரை மதக் கோட்பாடுகளின் பிடிப்பு' என்னும் நோயால் இந்த உலகம் வருந்தியுள்ளது."

அறிவிற் சிறந்த டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களது இந்த அருள்மொழி கருத்தில் இருத்தத்தக்கது. இதுவே உண்மையாகும். மனிதன் தன் அறிவாற்றலால் ஒருசமயத்தை உண்டாக்குகிறான். பின்வருவோர் தமது சமயவெறியால் அச் சமயத்திற்கு இழுக்கைத் தேடுகின்றனர் என்பதுதான் வரலாறு அறிவிக்கும் உண்மை. ஆதலால் நாம் அறியவேண்டும் உண்மைச் செய்தி யாது?

"நம் கோட்பாடுகள் எல்லாம் சத்தியத்தை நோக்கிச் செல்கின்றனவே யொழிய முற்றிலும் சத்தியமானவை என்று கூறிவிடமுடியாது என்பதை உணர்ந்தால், இன்னும் அதிகசத்தியத்தைப் போதிக்கக் கூடிய பிறதத்துவங்களை நாம காணும்போது, நம்கோட்பாடுகளைத் திருத்தி வைத்துக்கொள்ளத் தயாராகி விடுவோம். ஆகவே, இந்நிலையில் எந்த ஞானதத்துவமும் அதிகார பூர்வமானதோ, கட்டாயமாக மனிதர் எல்லோரும் பினபற்றவேண்டுமே என்று கூறக் கூடியபடி முடிவானதோ அன்று."

என்று டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் கூறும் அருள் மொழி எண்ணிப் பார்க்கத்தக்கது. இப் பெரியாரது இவ் வருள் மொழி, சமயவெறியை அகற்றி அறிவுநெறியைப் பரப்பவல்லது; ஒவ்வொருவருடைய சமய உண்மைகளையும் மதிக்கத் தூண்டுவது; எல்லாச் சமயங்களிடத்தும் பொதுநோக்குக் கொள்ளச்செய்வது.

## நாத்திகர் யார்?

மெய்யெல்லாம் திருநீறு நீண்ட தாடி அல்லது மழித்தலைக் கொண்ட தலை—உடம்பெல்லாம் உருத்திராக்கமாலை;—இடையில் காவியாடை—செய்வனவெல்லாம் ஒழுக்கக்கேடான செயல்கள்—இத்தகையோரைப் பாமரமக்களும், இவ் வேடதாரிகளிடம் சிறிது பணம்பறித்து உண்ணும் கபடதாரிகளும், இவர்களைச் சமய மேன் மக்களென்று கொண்டாடுகின்றனர். ஒருசில செய்தித் தாள்களும்

பணம்பெற்றுக்கொண்டு இவர்களை விளம்பரப்படுத்துகின்றன. இப் போலி வேடதாரிகளைச் சிவபெருமான் அவதாரமென்றும், நால்வர் அவதாரமென்றும் நயவஞ்சகர் நாக்கூசாது பொய்யாகப் போற்று கின்றனர். சைவசமயத்தின் உண்மைக் கொள்கைகளைக் கடுகள வும் பின்பற்றாத இவர்கள் 'ஆத்திகப் பெரியார்கள்' என்று அறி விக்கப்படுகின்றனர். இவர்களைப் போலவே தொழிலாளிகள் வாழ்க் கையை வளப்படுத்தாத செல்வரும், ஏழைகளை வருத்தும் செல்வ ரும் அச் செல்வரைக் காக்கைபிடித்து வாழும் சிலரும், பற்பல துறைகளில் ஒழுக்கம்கெட்ட பிறரும் தாம் நந்தியெம்பெருமான் கால்வழி வந்தவர் என்றும் 'ஆத்திகர்' என்றும் தமது பணபலத் தாலும், பிரசார வன்மையாலும் கூறிவருவதை நாட்டிற் பிறந்த நல்லறிஞர் நன்கு அறிவர். இவர் அனைவரும் உண்மையில் ஆத்தி கரா? டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களது அருள் மொழியைக் கீழே காண்க:

"இன்று நம்மிடையே நாத்திகர்கள் என்று அழைக்கப் படுபவர் கள் உண்மையில் நாத்திகர் அல்லர். ஆனால் நம்முடனே இருந்து கொண்டு போலிவேடதாரிகளாய் ஆத்திகம் பேசி அறநெறியிற் செல் லாமலும் உண்மையான பக்தி இல்லாமலும் திரிபவரே உண்மையில் நாத்திகர்."

இந்த உண்மையைப் பொதுமக்கள் நன்கு உணர வேண்டும். உணர்ந்தால்தான் போலிகள் திருந்துவர். உண்மைச் சமயவாதிக்கு நாட்டில் மதிப்புஏற்படும். ஒழுக்கமுடையவனே சமயவாதி-பொதுமக் களுக்கு உழைப்பவனே சமயவாதி என்னும் உண்மை உலகில் நிலவ வேண்டும். இது நிலவினாற்றான் ஒவ்வொரு சமயமும் தூய்மை பெறும். தம்மை 'ஆத்திகர்' என்று சொல்லும் 'நாத்திகர்' களும் திருந்துவர்.

இந்த உண்மைகள் எல்லாம் இராமலிங்க அடிகளாரது அருட் பாவில் பொதிந்துகிடக்கின்றன. மக்கள் அருட்பா அமுதினைப் பருகி, "எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்" என்னும் மந்திரம் ஒன்றையே நினைந்து வாழும் நாளே, இச் சமுதாயம் நல்வாழ்வுத் துறையில் செல்லத் தொடங்கும் நன்னாளாகும்.

---

# உழைப்பும் உயர்வும்

வித்துவான்-து. கண்ணம்மாள், பாத்திமா கல்லூரி, மதுரை.

உலகமக்கள் தொகையை நோக்க, அவருள் முயற்சியால் உயர்ச்சி பெற்ற பெருமக்கள் சிலராவர். அவருள்ளும் தாழ்த்தப்பட்ட இனத்தையோ, அடிமைப்பட்ட இனத்தையோ, சேர்ந்தவர் மிகச் சிலரே யாவர். அம்மிகச்சிலருள் ஒருவரே ஜியார்ஜ் வாஷிங்குடன் கார்வர் என்பவர்.

இளமைப் பருவம்:—கார்வர் நீகிரோ இனத்தவர்; அடிமைப் பெண்ணுக்குப் பிறந்தவர்; மிஸௌரி மாகாணத்தில் வாழ்ந்த மோசஸ் கார்வர் எனனும் அமெரிக்கரால் சென்ற நூற்றாண்டின் இடைப்பகுதியில் பேரன்புடன் வளர்க்கப்பட்டவர். அவர் இளமையில் பலவகைச் செடிகளையும் மரங்களையும் கூர்ந்து கவனித்து, அவற்றின் வளர்ச்சியை ஆராய்ந்து வந்தார்; பலவகை மலர்ச்செடிகளைப் பல இடங்களிற் பயிரிட்டுப் பழகினார்; பல்வகை எருவகைகளை ஆராய்ந்து, அவற்றைச் செடிகட்குப் பயன்படுத்தினர்.

கல்விப் பயிற்சி:—கார்வர் பத்துவயதிற்குப் பின்பே பள்ளியில் சேர விழைந்தார். ஆயின், அவர் நீகிரோவர் என்ற ஒரேகாரணத்தால் பள்ளியில் சேர்க்கப்பட்டிலர். எனினும், கற்பதில் பேரார்வம் கொண்ட அவர், ஆசிரியர், வகுப்பிற் கற்பித்தவற்றைப் பள்ளியின் வாயிலில் இருந்தபடியே அன்றாடம் கேட்டு அறிவைப் பெற்றார்; பின்பு எவ்வாறேனும் ஒருபள்ளியிற் சேர்ந்து பயில உறுதிகொண்டு, தமது வளர்ப்புப் பெற்றோரிடம் விடைபெற்று, நியோஷா என்னும் நகரம் சென்றார்; அங்கிருந்த பள்ளியில்சேர்ந்து பயின்றார்; மூன்றாண்டுகட்குப் பின்னர் கான்ஸாஸ் நகரத்தில் இருந்த பெரியபள்ளியிற் சேர்ந்து சிலஆண்டுகள் கல்விகற்றார்.

**கல்லூரிக் கல்வி:**—உயர்நிலைப் பள்ளிப்படிப்பை முடித்த கார்வர் தமது இருபத்தைந்தாம் வயதில் ஆம்ஸ்நகரத்திலிருந்த அயோவா கல்லூரியில் சேர்ந்தார்; தம் உழைப்பாலும் பணிவாலும் இன்சொல்லாலும் அனைவர் உள்ளங்களையும் கவர்ந்தார்; கல்லூரியில் நடைபெற்ற கட்டாய இராணுவப் பயிற்சியில் முதலிடம்பெற்றார்; அதனால் கல்லூரி இராணுவப்பயிற்சிப்படையின் தலைவராகப் பல்லோர்பாராட்டுதலை உற்றார்; பொருள்முட்டுப்பாடுநேர்ந்த சமயங்களில் பல இடங்களிற் பணியாற்றிப்பொருளீட்டினார்; வீட்டைத்தூய்மைசெய்வதுமுதல் மடைத் தொழில் ஈறாகப் பலதொழில்களையும் செய்து, பாராட்டும் பணமும்பெற்றார். இவ்வாறு அவர் ஒருபால் தம் வறுமையைப்போக்கவும், மறுபால் கல்விகற்கவும் பெரும்பாடுபட்டார்; தம்இனத்தவரை உயர்த்தவே தாம்கற்று அறிஞராகவேண்டுமென்று அவாவினார். அவர் மாணவராக இருந்தபோது சிறந்த ஓவியராவும் திகழ்ந்தார். சிகாகோவில் நடைபெற்ற பொருட்காட்சியில் அவரது ஓவியம் அறிஞரால் பாராட்டப்பட்டது.

அவர் இளமைமுதல் ஊக்கம் காட்டிவந்த தாவர ஆராய்ச்சியே அவரது விருப்பபாடமாக அமைந்தது. அவர் பலவாறு ஆராய்ச்சி செய்து, "மாற்றப்பட்ட தாவரங்கள்" என்பதுபற்றி ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை வரைந்து பி. எஸ்ஸி பட்டம்பெற்றார்; பின்பு தாவர ஆராய்ச்சியை மேலும் தொடர்ந்து செய்து, தாவரங்களின் சிறப்புக் குறித்துச் சிலஉண்மைகளை வெளியிட்டார். அவருடைய ஆராய்ச்சி முடிவுகளை ஏற்ற அறிஞர்கள் அவருக்கு எம். எஸ்ஸி பட்டத்தை வழங்கினர்.

**பேராசிரியர் பதவி:**—எம். எஸ்ஸி பட்டம் பெற்றகார்வர் தாம் படித்த கல்லூரியிலேயே உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். அக்காலத்தில் அமெரிக்காவில் டஸ்கிகி என்னும் இடத்தில் புக்கர் வாஷிங்டன் என்னும் நீக்ரோ அறிஞர் தம் இனத்தவர்க்கெனக் கல்லூரி ஒன்றைத் துவக்கினார்; அக்கல்லூரியிற் பயிர்த்தொழிற் கலையைக் கற்பிக்கும் ஆசிரியர் பதவியை நமது கார்வரை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினார். தாழ்ந்து கிடந்த தமது இனத்தவரை உயர்த்துவ

தையே தமது வாழ்க்கையின் குறிக்கோளாகக்கொண்ட கார்வர், புக்கரது வேண்டுகோளுக்கு இசைந்து, அவரது கல்லூரியில் விஞ்ஞானப் பேராசிரியர் பதவியை ஏற்றார்.

மாணவர் இழைத்த சோதனைகள்:—வறுமையின் பிரதிநிதியாக விளங்கிய கார்வரது மெலிந்த தோற்றத்தைக் கண்ட மாணவர், அவரது திறமையில் ஐயங்கொண்டனர்; 'உருவுகண்டு எள்ளாமை வேண்டும்' என்பதை மாணவர் எங்ஙனம் அறிவர்? தாவரக்கலையில் அவர் பண்பட்ட அறிவினரா என்பதை அறிய விரும்பினர். ஒரு நாள் அவர் பிற ஆசிரியர்களுடன் பேசிக்கொண்டிருந்த சமயத்தில் மாணவர் பல வகைச் செடிகளுடனும் கொடிகளுடனும் அவரிடம் சென்றனர். மாணவன் ஒருவன் ஒரு செடியைக்காட்டி அதன்பெயரைக் கூறுமாறு வேண்டினான். கார்வர் அதன் பெயரைக் கூறியதோடு அமையாது, அதன் பயன்களையும் விளங்க உரைத்தார். பின்னர் ஒவ்வொரு மாணவரும் ஒரு செடியையோ, கொடியையோ காட்டி அதைப்பற்றிய விவரங்களைக் கேட்டனர். இளமை முதலே செடி கொடிகளுடன் பழகிப் பேரறிவு பெற்றிருந்த கார்வர், மிக்க பொறுமையுடன் பல விவரங்களைக் கூறி மாணவர்களை மனமகிழச் செய்தார்.

பண்ணைத்தொழிலிலும் தங்கள் ஆசிரியர் பண்பட்ட அறிவினரா என்பதை ஆராய மாணவர் விரும்பினர். வழக்கம்போல் வெண்ணெயாக மாறவேண்டும் பால் ஒருநாள் மாறவில்லை. உடனே மாணவர் கார்வரிடம் அதனை அறிவித்தனர். இப்பெரியார் உடனே மாட்டுத் தொழுவத்திற்கு விரைந்தார். அவர் ஒன்றும்கூறாது மாட்டுத் தொழுவத்திற்கு விரைந்தமை மாணவர்க்கு நகைப்பை விளைத்தது. மாட்டுத் தொழுவத்தைப் பார்வையிட்டு மீண்ட கார்வர், "மாடுகட்குப் பருத்திக் கொட்டை மிகுதியாகத் தரப்படுகின்றது; அது பாலில் மிகுதியாக எண்ணெயை உண்டாக்குகிறது. இனி மாடுகட்குக் குறைந்த அளவில் பருத்திக்கொட்டை கொடுப்பது நல்லது," என்றனர். மாணவர் அவரது நுண்ணறிவை வியந்து பாராட்டினர்.

**ஆய்ந்து கண்ட புதுமைகள்**—கார்வர் ஒரு நாள் மாலை உலவச் சென்ற பொழுது, வழியில் கழிவுப் பொருள்களைக் கொண்ட மேடு ஒன்றைக் கண்டார். அங்கு ஒரு பூசணிக் கொடியும் திராட்சைக் கொடியும் வளமாகப் பயிராகியிருந்தன. அவற்றின் வளத்திற்குக் குப்பைமேடே காரணம் என்பதை அறிந்த கார்வர், பல குப்பைமேடு களை உண்டுபண்ணினர்; அங்கெல்லாம் செடிகொடிகளைப் பயிரிட்டார். அங்ஙனம் பயிரிடப்பட்டவற்றுள் 'பீன்ஸ்' ஒன்றாகும். கார்வர் அதனைப் பல்வேறு வழிகளிற் பதப்படுத்திச் சுவை மிகுந்த உணவுப் பொருள்களைச் செய்தார். அவற்றைச் சுவைத்த மக்கள், கார்வரது ஆராய்ச்சித் திறனையும் மடைத் தொழிற் பயிற்சியையும் பாராட்டினர்.

கார்வர் களிமண்ணின் பலவகைகளில் ஆராய்ந்து அவற்றுட் சிலவற்றை எண்ணெயுடன் கலந்தார்; அக்கலப்பால் ஒரு புதிய நிறம் உண்டாயிற்று; சிவந்த களிமண்ணைக்கொண்டு ஆராய்ச்சி நிகழ்த்திப் புதிய நீலநிறத்தைக்கண்டார்; அதனை மேலும் தொடர்ந்து ஆராய்ந்து பதப்படுத்தினர். இங்ஙனம் அவராற் கண்டறியப்பட்ட புதிய நிறம் எளிய மக்கள் இல்லங்களையும் தொழுவங்களையும் அழகுபடுத்தியது.

கார்வர் மடைத்தொழிலில் பண்பட்ட அறிவுடையார் என்பதை முன்பே குறித்தோம் அல்லவா? அவர் உருளைக்கிழங்கு, பீன்ஸ் இவற்றைக்கொண்டு பலவகை உணவுப் பொருள்களைச் செய்யும் முறைகளைக் கண்டறிந்தார்; அவற்றைப் பலரறியச்செய்துகாட்டினர்; நீகிரோவர் அவர்வழியைப் பின்பற்றிப் பலவகை உணவுப்பொருள்களைச் செய்யப் பயிற்சி பெற்றனர்; அமெரிக்க வெள்ளையரும் அவரது ஆராய்ச்சித் திறனைப் பார்த்து வியந்து பாராட்டினர்.

ஆராய்ச்சி அறிஞரான கார்வர் நிலக்கடலை ஆராய்ச்சியிலும் ஈடுபட்டார்; பல ஆண்டுகள் தொடர்ந்து ஆய்ந்து, பல உண்மைகளைக் கண்டார்; நிலக்கடலை சிறந்த உணவுப்பொருள் என்பதை மெய்ப்பித்தார்; அதன் மாவிலிருந்து ரொட்டியைத் தயாரிக்கும் முறையைக் கண்டார்; நிலக்கடலையிலிருந்து எண்ணெயையும் பாலையும் எடுக்கலாம்

என்பதைச் செய்துகாட்டினர்; நிலக்கடலையைக் கொண்டு பலவகைத் தின்பண்டங்களைச் செய்யலாம் என்பதையும்பலரறியச் செய்துகாட்டினர்; ஒருமுறை டஸ்கிகியில் நடந்த விருந்தொன்றில் கறிவகைகள் அனைத்தையும் நிலக்கடலை கொண்டே அமைத்தார்; அனைவரும் விருந்துண்டபிறகு கார்வர் இந்தஉண்மையை வெளியிட்டார். அதைக் கேட்ட விருந்தினர் அடைந்த வியப்பிற்கு அளவேயில்லை.

பேராசிரியர் கார்வர் பருத்திச்செடியிலிருந்து காகிதமும், வெண்டைச் செடியிலிருந்து கம்பிளி போன்ற ஒன்றையும் தயாரித்துக் காட்டினர், நிலக்கடலையிலிருந்து தாம் தயாரித்த எண்ணெயைக்கொண்டு பாரிச வாயுவைப் போக்கலாம் என்பதை மெய்ப்பித்தார்.

**உழைப்பால் வந்த உயர்வு:**—கார்வர் பல்லாண்டுகளாக உழைத்துக் கண்டறிந்த ஆராய்ச்சி முடிவுகள் அமெரிக்கரிடையே பெரும் பயன் அளித்தன. அமெரிக்க அரசாங்கமும் பல்கலைக் கழகங்களும் அவரைப் போற்றலாயின.

> "அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்"
>
> "கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
> மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே"

என்பன அனுபவ உரைகள் அல்லவா? அவர் 'விஞ்ஞானப் பேரறிஞர்' (Doctor of Science) என்ற பட்டம் வழங்கப் பெற்றார்; தாமஸ் ஆல்வா எடிசனது விஞ்ஞானக்கலைப் பரிசைப் பெற்றார்; விஞ்ஞானத் துறையில் பாராட்டத்தகும் ஒருவருக்கு என ஒதுக்கப்பட்ட ரூஸ்வெல்ட் பதக்கமும் அவரைத் தேடி வந்தது. அவர் 'அமெரிக்க விஞ்ஞானிகளுள் 'ஒருவர்' என்று அனைவராலும் ஒப்புக்கொள்ளப் பட்டார் இதுவன்றோ பெறத்தக்க பேறு! உழைப்பு அளித்த உயர்வு!

புக்கர் வாஷிங்குடன் 1915-ல் காலமானர். அவரது உடலடக்கத்திற்கு அமெரிக்கக் குடியரசுத் தலைவரான ரூஸ்வெல்ட் டஸ்கிகிக்கு வந்திருந்தார். அது முடிந்தபிறகு அப்பெரியார் கார்வருடன் கை கோத்துக்கொண்டு உலவினர். அப்பொழுது அவர் நமது பேராசிரி

யரை முகமலர்ச்சியோடு பார்த்து, "புக்கரும் நீங்களும் நீகிரோ இனத்தவரை உயர்த்தச் செய்த தொண்டு போற்றற்குரியது. நீகிரோவர் அறிவாற்றல்களில் வெள்ளையருக்குக் குறைந்தவரல்லர் என்பதையும், நீகிரோவர் அமெரிக்கக் குடிகளுள் ஒரு முக்கியமான பகுதியினர் என்பதையும் உங்கள் தொண்டினால் மெய்ப்பித்துவிட்டீர்கள். அமெரிக்க வெள்ளையரும் நீகிரோவரும் இந்நாட்டில் ஒன்றுபட்டு உழைத்து வாழலாம் என்பதை நாம் இருவரும் கைகோத்து உலவுவதாலும் அளவளாவுவதாலும் உலகினர்க்கு உணர்த்துகின்றோம். இப்பொழுது நீங்கள் செய்துவரும் தொண்டிலும் மேலானது ஒன்றில்லை," என்று உணர்ச்சி ததும்ப உரைத்தார்.

முடிவுரை:— கார்வர் தமது எண்பத்து மூன்றும் வயதில் இவ்வுலகவாழ்வை நீத்தார். அவருடைய ஆராய்ச்சிப் பொருள்கள் டஸ்கிகி கல்லூரியில் இன்றும் இருந்துவருகின்றன. அவரது பருவுடல் அழிந்தது; ஆயின் அவருடைய ஆராய்ச்சியாலும், நீகிரோவர்க்கு அவர் செய்த தொண்டினாலும் அவரது புகழுடம்பு உலகில் நிலைத்திருக்கிறது. அவரது உயர்வுக்கும் அழியாப் புகழுக்கும் காரணம் என்ன? ஊக்கம், உழைப்பு, ஆராய்ச்சி மனப்பான்மை, மனத்தெளிவு, துன்பங்களை முகமலர்ச்சியோடு பொறுத்து எண்ணியதை எண்ணியாங்கு அடைவதில் இருந்த மனவுறுதி, நகைமுகம், இன்சொல், சிறந்த ஒழுக்கம் என்னும் நற்பண்புகளின் திரட்சியே அவருடைய உயர்வுக்கும் அழியாப் புகழுக்கும் காரணமாகும். முயன்றால் முடியாதது உண்டோ?

# அழகோ அழகு

மா. ரா. இளங்கோவன் B. A. (Hons.)

அழகு செய்துகொள்ள விரும்பாதவர்கள் யார்? அழகுள்ளவர்கள் தங்கள் அழகுக்கு அழகு செய்யும் வகையில் அழகை விரும்புகிறார்கள். அழகற்றவர்கள் தங்கள் உருவைப் பிறர் கண்டு போற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் அழகு செய்துகொள்ளுகிறார்கள். அழகுக்குத் தகுதி என்பதில்லை. யாவரும் கொள்ளலாம். அவரவர் தகுதிக்கேற்பவே அழகு அழகுபெறும், தண்ணீர் தன்னை யேந்தி நிற்கும் பொருளின் தன்மையைப் பெறுவது போல.

'அகத்தின் அழகு அழகு' என்று பேசப்பட்ட போதிலும் புறத்தின் அழகு போற்றப்படா திருந்ததாக நம்மால் அறிய முடியவில்லை. புறஅழகுக்குத் தன்னை உரியவளாக்கிக் கொள்ளாத காரணத்தால்தான் கண்ணகி தன்வாழ்வை அவலமாக்கிக் கொண்டாள். அதேபோது புற அழகுக்குத் தன்னை உரியவளாக்கிக்கொண்ட மாதவி அதனையே வாழ்வின்பத்துக்கு அடிப்படையாகக் கருதினாள்; எனவேதான் அவள் வாழ்விலும் அவலம் புகுந்தது.

தமிழ்மக்கள், வாழ்வில் அழகை நன்குசுவைத்தார்கள். அழகு இன்றேல் வையமே சுவைபயக்காது என்றும், அழகுதான் இவ்வுலகத்தை இன்பமயமாக்குகின்றது என்றும் தமிழ்மக்கள் எண்ணினர். தமிழகத்தில் வாழ்ந்த தமிழ்மக்கள் தங்களை எவ்வாறு அழகுசெய்து கொண்டு பொலிவுற்று விளங்கினார்கள் என்பதை விளக்குவதே இக் கட்டுரையின் குறிக்கோள்.

பெண்கள் தங்கள் கூந்தலை முடிப்பு முறைகளில் ஐந்து முறைகளைக் கையாண்டனர். இதனையே புலவர் ஐம்பால் என்று குறித்தனர். 'பால்' என்றால் இங்கு பகுதிஎன்று பொருளாகும். அறத்துப் பால், பொருட் பால், இன்பத்துப் பால் என்ற பெயர்கள் 'பால்' என்றால் பகுதி என்பதை வலியுறுத்தவல்லன. இந்த ஐந்து பகுப்பு முறையைப் பழந்தமிழ் இலக்கியமான நற்றிணை கூறுகின்றது.

நம் காலத்தில், திரைப்பட நடிகையர் தமது கூந்தலைப் பின்னல் பின்னி முடியாமல் தாழவிட்டு அழகுசெய்துகொள்ளும் முறை நாகரிகமான ஒன்று என்று கருதி இன்று எல்லோராலும் கையாளப்படுகிறது. இம்முறைபலநூற்றூண்டுகளுக்கு முன்னதாகவே நம்தமிழகத்து மக்கள்வழக்கில் இருந்தது என்பதை அறிந்தால் நாம் வியப்புறுவோம் அல்லவா?

"புறந்தாழ்பு இருளிய பிறங்குகுரல் ஐம்பால்"

என்ற இம்முறை நற்றிணையில் கூறப்பட்டுள்ளது.

இங்ஙனம் கூந்தலைப் பகுத்துப் பின்னுகையில், அதன் ஒப்பனைக்கு நறுமணமும் பயன்படுத்தப்பட்டது. பரிபாடலில் பூதங்கண்ணனார் பாடிய பாடலொன்று கூந்தல் ஒப்பனைக்குப் பழங்காலப் பாவையர் பயன்படுத்திய நறுமணமுறையைக் கூறுகின்றது. மலைச்சாரலில் வளர்ந்த சந்தனமரத்தின் மணமிக்க துகளோடு, வேறு சில காட்டுமரங்களின் துகளும் சேர்த்துச் செய்யப்பட்ட கலவையைக் கூந்தலில் தடவ, கூந்தல் நறுமணம்கொண்டு விளங்கும் என்பதுதான் அப்பாடல் காட்டும் ஒப்பனை வழி. இக் கலவையினைத் 'தகரம்' என்றும் 'நெய்' என்றும் நம்முன்னவர் வழங்கினர்.

கூந்தலைப் பாதுகாத்தலில் பெண்கள் விசேட கவனம் செலுத்தினர். காட்டுமல்லிகை, அதிரல், குவளை, நெய்தல் முதலிய பலவித மணந்தரும் மலர்களை அக்கால மங்கையர் கூந்தலிலே சூடிக்கொண்டனர். காதலன் ஒருவன் தன்னால் அன்பு செய்யப்பட்டவளை விட்டுப் பிரிந்துசென்றான். அவன் பிரிவால் வாடும் தலைவியைக் கண்டார் புலவர். அவர் கண்களில் அவளின் கூந்தல் பட்டது. அதன் அழகைக் கண்டார். அந்த அழகுடைய கூந்தலைக் கண்டவாறில்லாமல் பொருள் தேடச்சென்றானே அவன் என்று எண்ணினர். அவர் கூறுவதையும் காண்போம். "தலைவியின் கூந்தலில் உள்ள காட்டு மல்லிகை, பாதிரி, செங்கருங்காலிப் பூக்களிலுள்ள தேனை உண்ண வண்டுகள் சரிந்து சரிந்து விழுகின்றன. கூந்தலோ, பூக்களை அள்ளி வைத்த பூஞ்செப்பு மூடிநீக்கித் திறந்துவைத்தாற் போன்று இருக்கின்றது.

இத்தகைய கூந்தல் மாண்பறியாது பொருள்தேடப் போனானே காதலன்" (நற். 347.) இப்புலவரின் பாடலினால் கூந்தலை மகளிர் பாதுகாத்துக் கவின் நல்கிய காட்சியை நாம் காணமுடிகிறது.

இக்காலத்தில் கூந்தலுக்கு வழங்கும் பெயர்கள் இடத்திற்கேற்ப வேறுபட்டுள்ளன. மலையாளத்தில் அஜந்தா கொண்டை என்றும், சோழநாட்டில் பிச்சடா, கோடாலி முடிச்சு என்றும், பாண்டிய நாட்டில் பங்கொண்டா என்றும் கூந்தலுக்கு மறுபெயர்கள் வழங்கப்படுகின்றன.

கூந்தலை அள்ளிச் செருகாமல் தாழவிட்டு அழகுசெய்து கொள்ளும் முறை மட்டுமல்லாது, கொண்டையிட்டுக் கொள்ளும் 'முடி' என்ற வகையும் இருந்தது என்பதை 'வெறிகமழ் துறுமுடி தயங்க" என்ற ஆட்சியால் அறியமுடிகிறது.

பெண்களுக்கு அணி அவசியமானதுதான் என்பதை "ஆடமைத் தோள் நல்லார்க்கு அணியும்" என்று பவணந்தியாரும் கூறியுள்ளார். பண்டைக் காலத்துப் பாவையர் சுரிதகம் என்னும் ஓர் அணியை அணிந்தனர். இது இன்று நாம் வழங்கும் 'திருகுப்பூ' என்பதாகும். சுரிதகம் என்றால் சுற்றிசுற்றிச் சென்று தேய்வது என்பது பொருள். திருகுப்பூவின் உருவ அமைப்பை நினைவுபடுத்திக் கொண்டால் சுரிதகத்தின் பொருளை விளங்கிக் கொள்ளலாம். சுரிதகத்தை அவர்கள் கூந்தலில் அணிந்தனர்.

பாலங்கொற்றனார் என்னும் புலவர் பாடலால் இக்காலத்தில் நாம் வழங்கும் 'சிமிக்கி' என்னும் அணி அக்காலத்தில் மகளிரை எழில்கொள்ளச் செய்தன என்று அறியமுடிகிறது. நாம் வழங்கும் சிமிக்கியை அன்று 'குழை' என்று அழைத்தனர்.

இன்று நாம் கொலுசு என்றும் தண்டை என்றும் வழங்கும் அணிவகைகள் பண்டு கிண்கிணி என்னும் பெயர் பெற்றிருந்தன. கிண்கிணியில் 'பரல்' இடப்பட்டிருக்கும். இவ்வணி பற்றிய குறிப்புக்கள் புறநானூறு நற்றிணை போன்ற நூல்களில் வந்துள்ளன.

மகளிர் வளையல்களைக் கரங்களில் அணிந்துகொள்ளும்போது நாகரிகம் என்று எண்ணி ஓரிருவளைகளே அணிந்துகொள்ளுகின்றார்

கள். பலவாக வளைகள் அணிவது அநாகரிகம் என்று எண்ணும் அளவுக்கு இன்று நாகரிகம் வளர்ந்துவிட்டதாக எண்ணுகிறார்கள். ஓரிரு வளைகள் அணிவதே அழகு தருவதாகும் என்றும் பலவாக அணிந்தால் அழகுகெடும் என்றும் நினைத்து இயற்கை அழகையும் கெடுத்துக் கொள்ளுகிறார்கள். வளைகள் அணியும்போது நிரம்ப வளைகள் அணியும் பெண்களை எண்ணிப்பார்த்து 'காலப்போக்கு அறியாதவர்கள்' என்று கூறுகிறார்கள். இப்போது அவர்கள் மனத்திருக்கும் எண்ணம் காலப் போக்கை உணர்ந்து அதற்கேற்ப நாகரிகமாக ஒழுகுமளவுக்கு நமக்குக் கல்விதான் துணைபுரிகிறது என்பதேயாகும். அதனால் அவர்களையு மறியாமல் நாம் கற்ற கல்வியைப் புகழ்வதுடன் மட்டுமல்லாமல் மேனாட்டு நாகரிகமுறையையும் போற்றத் தொடங்கி விடுகிறோம். நம்மிடமுள்ள பெருங்குறைகளில் இதுவும் ஒன்று; அந்தந்த நிமிடநேர வாழ்வாகவே நினைப்பாகவும் செயலாகவும் எண்ணிச் செய்து வாழ்வதே நாகரிகம் எனக் கருதுவதுதான் இக்குறைக்குக் காரணம். சில வளையல்கள் அணிவதுதான் நாகரிகம் என்றும் அது காலப்போக்கில் நாகரிகமனத்தால் ஏற்பட்ட புதுமாற்றம் என்றும் எண்ணும் நாம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்த மகளிரிடம் பேசினால் அவர்கள் நாங்கள் சில வளைகள்தான் அணிந்தோம், பெண்களில்சிலர் பல வளைகளும் அணிந்தனர் என்று கூறுவதைக் கேட்கலாம்.

"சில்வளைப் பல்கூந்தலளே அவளே"

"நிறைவளை முன்கை நேரிழை மகளிர்"

இதுகாறும் கண்டவற்றால் பெண்கள் தாங்கள் அழகுக்காகச் செய்துகொள்ளும் அழகுவகைகள் காலத்தால் மூத்தனவையே என்பதை நாம் அறியலாம். அழகுணர்ச்சி பெண்களுக்கு இயற்கையானது என்பதையும் நம்முன்னுள்ளவர்கள் அழகுக்கலையைப் போற்றி வளர்த்துக் காத்தமையால் அறியலாம்.

# சிலம்பும் சமுதாய வாழ்வும்

மா. ரா. இளங்கோவன், B. A. Hons.

தாம் வாழும் காலத்தில் உள்ள மக்கள் தம் பழக்கவழக்கங்களை அடிப்படையாகக்கொண்டே கற்பனைகளைப் புலவர்கள் படைக்கின்றனர். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பழந்தமிழரின் சடங்குகளையும், பழக்கவழக்கங்களையும் கூறுவதைக் காணலாம். அவை அக்கால மக்களுடைய வாழ்க்கை நிலையை நன்குஅறியத் துணைசெய்வதாகும்.

முன் பழகியறியாத ஒருவனும் ஒருத்தியும் தக்க இளமையில் ஒருவரை ஒருவர் கண்டு பழகிக் காதல் கொண்டு மணந்து வாழும் வாழ்வே அக்காலத்தில் மிகுதியாக இருந்தது. கோவலனும் கண்ணகியும் காதலால் இணைந்தவர்களே என்பதை ஆசிரியர் அவர்களை மங்கல வாழ்த்துக் காதையில் அறிமுகப்படுத்தும்போதே கூறிவிட்டார். அவ்வாறு காதல்கொண்டுமணந்த கோவலன் கண்ணகியைப் பாராட்டும் பகுதியும ஆசிரியரால் சுவைபடக் கூறப்பட்டுள்ளது. நன்றாக ஒருவரை ஒருவர் அறிந்து, பின்னர் இணைந்து வாழும் வாழ்வு சிறந்தது என்பதையும் அந்த வாழ்வில் ஒருவர்பொறை இருவர் நட்பு என்னும் உயர்ந்த கருத்து நிலைபெற்றுவாழும் என்பதையும் நாம் உணரத் தக்க.முறையில் அமைந்ததே கோவலன்–கண்ணகி வாழ்வு.

தலைவன் பிரிந்து சென்ற நாட்களில் தலைவி கண்ணைப் புனைந்து கொள்ளாமலும் கூந்தலில் மலர்சூடாமலும் இருந்தாள் என்பது தெரியவருகிறது. கோவலன் கண்ணகியைப் பிரிந்து மாதவியை அடைந்து வாழ்ந்திருந்த காலத்தில் கண்ணகியின் நிலையை ஆசிரியர் அவலம் நிறைந்த ஓவியமாகச் சித்தரித்துள்ளார்;

"அஞ்செஞ் சீறடி யணிசிலம் பொழிய
மென்றுகில் அல்குல் மேகலை நீங்கக்
கொங்கை முன்றிற் குங்கும மெழுதாள்
மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்
திங்கள் வாண்முகம் சிறுவியர் பிரியச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பத்
பவள வாணுதல் திலகம் இழப்ப
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி ......"-(காதை 4, வரி 47-56.)

ஏதேனும் ஒரு பயன் கருதிச் சகுனம் பார்த்தலும் நற்சொல் கேட்டலும் அக்காலத்திலுண்டு. அவற்றோடு தமக்குவரும் தீங்குகளைத் தெய்வங்களுக்குச் சாந்தி எடுத்தலால் போக்கிக் கொள்ளக் கூடும் என்றும் மக்கள் நம்பினர். கொற்றவை வழிபாடும் இருந்தது.

ஐயைகோட்டத்தின் ஒருபுறத்தில், வேட்டுவக் குடியிற்பிறந்து தெய்வத்திற்கு வழிபாடு செய்யும் உரிமை பெற்ற சாலினி தெய்வ மேறப்பெற்று, "எயினர் மன்றுகள் பாழ்பட்டன; கடன் உண்ணின் அல்லது கொற்றவை வெற்றி கொடாள், ஆதலின் நீர் செலுத்துதற்குரிய கடனைச் செலுத்துங்கள்" என்றாள்.

" ...... ...... ...... ......
வல்வில் எயினர் மன்றுபாழ் பட்டன
மறக்குடித் தாயத்து வழிவளஞ் சுரவாது
அறக்குடி போலவிந் தடங்கின ரெயினரும்
கலையமர் செல்வி கடனுணி னல்லது
சிலையமர் வென்றி கொடுப்போ ளல்லள்
மட்டுண் வாழ்க்கை வேண்டுதி ராயின்
கட்டுண் மாக்கள் கடந்தரும்"-(வேட்டுவரி, வரி 13-19)

இதனால் அக்காலமக்கள் தமக்குவரும தீங்குகளைப் போக்கிக் கொள்ளத் தெய்வங்களுக்குச் சாந்தி எடுத்தால் போதும் என்று எண்ணினர்-நம்பினர் என்பதையும் கொற்றவை வழிபாடு இருந்தது என்பதையும் நாம் அறியலாம்.

கோவலன் மாதவி மனையினின்று கண்ணகியை விட்டுப் பிரிந்து சிலம்பு விற்றுப் பொருளீட்டச் சென்றபோது ஏறு ஒன்று எதிர்ப் பட்டது. அதனைக் குறிப்பிடும் ஆசிரியர்

> "இமிலே றெதிர்ந்த திழுக்கென அறியான்
> தன்குலம் அறியுந் தகுதியன் றாதலின்"
> (கொலைக்களக்காதை, வரி 100-101)

என்றார். இதனால் இமிலேறு எதிர்ப்படல் அபசகுனம் என்று மக்கள் கருதிவந்தனர் என்பது தெரிகிறது.

இளம்பெண்கள் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளைச்செய்து வந்ததுடன் பொழுதுபோக்காகவும் காலத்தைக் கழித்தனர். மலையருவி ஆடுதல் மகளிர்க்குரிய பொழுதுபோக்குத் துறைகளில் ஒன்றாகும். அவர்கள் அருவி ஆடும்போது தம்மால் காதலிக்கப்பட்ட தலைவனுடைய மலையினையும் நாட்டினையும் பற்றிக் கூறலும் முறையாக இருந்தது:

> "இந்திர வில்லின் எழில்கொண் டிழுமென்று
> வந்திங் கிழியு மலையருவி யாடுதுமே
> ஆடுதுமே தோழி யாடுதுமே தோழி
> அஞ்சலோம் பென்று நலனுண்டு நல்கா ரார்
> மஞ்சுசூழ் சோலை மலையருவி ஆடுதுமே"-(குன்றக்குரவை, 2)

பெண்கள் குரவைக் கூத்தாடுதலும் உண்டு. அருவி யாடியபின் குரவைக் கூத்தாடத் தன்தோழியை அழைக்கின்றாள் குறமகள் ஒருத்தி.

> 'உரையினி மாதராய், உண்கண் சிவப்பப்
> புரைதீர் புனல்குடைந் தாடினோ மாயின
> உரவுநீர் மாகொன்ற வேலேந்தி ஏத்திக்
> குரவை தொடுத்தொன்று பாடுகம்வா தோழி!'-(குன்றக்குரவை 6)

"நீ அஞ்சல்வேண்டா. எத்தகைய இடர்வரினும் நின்னையே மணப்பேன், நின்னையன்றிப் பிறமாதரை மனத்தாலும் எண்ணேன்" என்று காதலியிடம் சத்தியம் செய்யும் உண்மையான அன்புடைய சிலரை நாம் காணலாம். இவ்வாறு சத்தியம்செய்தபின், சத்தியத்தை நிறைவேற்றத் தவறினால், வழுவினால் தெய்வம் வருத்தும் என்ற நம்பிக்கை இருந்தது. இவ்வாறு சத்தியம்செய்தல் அல்லது ஆணையிடு

தல் அக்காலத்தில் 'சூள் உரைத்தல்' எனப்பட்டது. பூதப்பாண்டியன், நெடுஞ்செழியன், கிள்ளிவளவன் போன்ற பெருமன்னர்கள் உரைத்த சூளுரைகள் புறநானூற்றில் உள்ளன. சிலப்பதிகாரத்தின் மூலம் செங்குட்டுவனின் சூளுரையைக் காண்போம்.

இமயத்தாபதர் சிலர் செங்குட்டுவனைக் கண்டபோது, ஆரிய அரசர்களான கனகனும் விசயனும் தமிழரசரை இகழ்ந்து கூறியதாகக் கூறினர். அதனைச் செவியுற்ற செங்குட்டுவன்,

"இமயத்திலிருந்து வந்தமுனிவர்கள் எனக்கு இப்பொழுது அறிவித்த வடபுலமன்னவரின் வாய்மொழி எம்மையொத்த சோழ பாண்டியர்க்கும் இகழ்ச்சியைத் தரும் ஆதலின், வடநாட்டரசர்களின் முடியணிந்த தலைமீது தெய்வம சமைத்தற்குரிய ஒருகல்லை ஏற்றிக் கொண்டன்றி, என்னுடைய வாள் வறிதே திருமபுமாயின், பயன்மிகுந்த நன்னாட்டில் உள்ள குடிமக்களை நடுங்கச் செய்யும் கொடுங்கோன்மை யுடையவனாவேன்."

" ...... ...... ...... ......
வடதிசை மருங்கின் மன்னர்தம் முடித்தலைக்
கடவு ளெழுதவோர் கற்கொண் டல்லது
வறிது மீளுமென் வாய்வா ளாகில்
செறிகழல் புனைந்த செரு வெங் கோலத்துப்
பகையரசு நடுக்காது பயங்கெழு வைப்பிற்
குடிநடுக் குறூஉங் கோலே னாக"-(கால்கோட் காதை, வரி-9-14.)

என்று கூறினன்.

உரோகணியும் திங்களும் கூடியநாள் திருமணத்திற்கு ஏற்ற நாள் என்பது அக்கால மக்கள் நம்பிக்கை. கோவலன்-கண்ணகி திருமணமும் இந்நாளிலேயே நடைபெற்றது என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். (மங்கலவாழ்த்துக் காதை, வரி 50–53)

நம்பிக்கைஎன்பது பலதுறைகளில் மனிதனுக்குப் பெருந்துணையாக இருக்கின்றது. வேப்பிலையை வீசுவதாலும் வேப்பிலையை அரைத்துப் பற்றுப்போடுவதாலும் நீங்கிவிடக்கூடும் நோய் என்னும்

நம்பிக்கையுடைய ஒருத்தியிடம் மேனாட்டு மருத்துவ முறையால் பயன்காண முடியாது என்பதை நாமறிவோம். உளவியல் அறிந்த மருத்துவர்கள் அவள் நம்பிக்கையைமாற்றமுடியாமல் தங்கள்மருந்துகளைக் கொடுத்துப் பிணியைப் போக்குவதுமுண்டு. ஆயின் அவள் வேப்பிலை கலந்த நீரால்தான் தன்நோய் போனதாக எண்ணுவாள். நம்பிக்கையை விடாதிருப்பாள். இவ்வாறு, நம்பிக்கை எல்லாத்துறைகளிலும் பலரிடையே இருந்துவருகின்றது. மொழித் துறையிலேயும் ஒருவகையான நம்பிக்கை இருந்துவந்தது[1].

இந்த நம்பிக்கை நாளடைவில் ஆராய்ச்சியின் காரணத்தால் மாறிற்று. பழங்கால மக்கள் அம்பு, வேல் ஆகிய கருவிகளில் பாம்பு முதலியவற்றின் வடிவை எழுதினர். அவ்வாறு செய்வதனால், பாம்பு முதலியவற்றின் ஆற்றல் அந்தக் கருவிகளுக்கு அமைந்ததாக எண்ணினர். இதனை மேயவெண்டிரிஸ் என்பார் "லாங்குவேஜ்" என்னும் தமது நூலில்[2] குறித்துள்ளார்.

கற்புடைய மகளிர் இறந்த தம் கணவனை உயிர்ப்பிக்க முடியும் என்றும் அவர்வாய்மொழிகேட்கமுடியும் என்றும் மக்கள் நம்பினர். பத்தினிப்பெண்கள் கதைகள் பல இந்த அடிப்படையிலேயே தோன்றின. கண்ணகிக்கும் பத்தினிப்பெண்டிர் தம் கதைகள்எல்லாம் தெரியும். இளமையிலேயே அவளுக்கு இவ்வகையான கதைகள் எல்லாம் பெற்ற தாயாலும் பிறராலும் கூறப்பட்டிருத்தல்வேண்டும். எழு

---

1 "In earlier times it was the general belief that each of the great national languages had been formed by some particular great writer, Italian for example by Dante, English by chaucer, German by Luther and Danish by Christian Pederson" என்று யெஸ்பர்சன் என்னும் மொழியாராய்ச்சி அறிஞர் தமது நூலொன்றில் குறித்துள்ளார்.

2 "Certain savages draw a serpent or Leapord upon their weapons with the idea that these animals will confer aportion of their power on the object they decorate"

வகைப்பத்தினிப் பெண்டிரைப் பற்றிக் கண்ணகி, வஞ்சினமாலையில் கூறுகின்றாள். (வரி 5-34) இவ்வாறு தான் இளமையில் கேட்டறிந்த பலகதைகள் அவள் உள்ளத்தே அழியா இடம் பெற்றிருந்தமையாலும் அவள் அவற்றை அழுத்தமாக நம்பியதாலுமே 'கொலையுண்ட தன் காதற்கணவனைக் காண்பேன்' என்றும், கண்டு அவன் வாயில் குற்றமற்ற நல்லுரைகளைக் கேட்பேன் என்றும் சூளுரைக்கின்றாள் (ஊர்சூழ் வரி 11, 12) இவ்வாறு சூளுரைத்த கண்ணகி தன் கணவனைக் கண்டபோது அவன் எழுந்து, தன்னை இருக்குமாறு கூறிவிட்டு மீண்டும் இறந்ததாக எண்ணிக் கதறுகின்றாள்.

> "மாயங்கொல் மற்றென்கொல் மருட்டியதோர் தெய்வங்கொல்
> போயெங்கு நாடுகேன் பொருளுரையோ"

இதனை விளக்குகையில் பேராசிரியர் ராமச்சந்திர தீட்சதர், கூறியுள்ளமை காணத்தக்கது. கண்ணகியின் நம்பிக்கையே கணவனைக்கண்டதாகச் செய்தது. அவளுடைய பெருந்துயர் குறைய அவள் நம்பிக்கை துணை செய்தது என்னலாம்.

பின்வருவனவற்றை முன்னதாகவே அறிவிப்பனவாக உற்பாதம், தீபகனு, பழம்புள்போதல், புதுப்புள்வருதல், பறவைநிமித்தம், விண்வீழ்கொள்ளி முதலியவைகளைக் கருதினர் மக்கள். இவற்றுள் இளங்கோவடிகள் 'கனு'வைப் பயன்படுத்தி முன்னறிவிப்பாக நிகழ்ச்சிகளைக் கூறிச் செல்கின்றார். சிலப்பதிகாரத்தில் கோவலன், கண்ணகி பாண்டிமாதேவி ஆகிய மூவரும் கனுக் காண்கின்றனர். இம்மூன்று கனுக்களும் முன்னறிவிப்புக்களாகவே உள்ளன.

கண்ணகி தான்கண்ட கனவினைத் தேவந்தியிடம் கூறுகையில், "கடுக்குமென் நெஞ்சம்" என்று தான் தொடங்குகின்றாள்.

> "கோலவற் குற்றதோர் தீங்கென் றதுகேட்டுக்
> காவலன முன்னர் யான் கடடுரைத்தேன்"

---

[1]"She cried till she seemed to see Kovalan rise up to go to heaven saying to her 'stay here' (V. R. R. D. The Silapathikaram or the lay of the Anklet, p. 6.)

என்றெல்லாம் கூறுகின்றான். கண்ணகிகண்ட கனவும் பின்னர் நடை பெற்ற கோவலன் கொலையும் கண்ணகி வழக்குரைத்ததும் ஒரு சோக் காணின் மக்கள் நம்பிக்கையை ஆசிரியரும் ஏற்றுப் போற்றினர் என பது வெளிப்படை.

மகள் நோயுற்று மெலிவதைக்கண்ட பெற்றோர், நோய்க்குத் தெய்வம் காரணம் என எண்ணி வேலனை அழைத்து வெறியாடச் செய்தலும் உண்டு. வேலனை அழைத்து வெறியாடச் செய்துவிட்டால் மகளுக்குள்ள தெய்வக்குறை நீங்கிவிடும் என்பது அவர் தம் எண்ணம். மகள் நோய்க்குரிய உண்மையான காரணத்தை அறியாமல் வேலனை அழைத்து வெறியாட எண்ணும் பெற்றவர் தம் செய்கையை மறைமுகமாக நயமாகக் கண்டித்து உண்மையைக் கூறும் முறையும் அக்காலத்தில் இருந்தது.

வஞ்சிக் காண்டத்தில் உள்ள குன்றக்குரவை வெறியாட்டம் பற்றிய விளக்கத்தைத் தருகின்றது. பெற்றோருடைய வேண்டுகோளை யேற்று மகளுடைய நோயை வெறியாடித் தீர்ப்பதாக வேலன் வர ஒப்பிய செய்தியைக் கேட்ட தோழி கூறுகின்றாள் தலைவியிடம் பின்வருமாறு:

"தோழி நகைக்கத்தக்க நிகழ்ச்சி யொன்று நம்மைப் பின்னணியாகக் கொண்டு நடைபெறுகிறது என்பதை நீ அறிவாயா? அறியாவிட்டால் மடமைமிக்க அந் நிகழ்ச்சியை நான் கூறவேணும் அறிந்துகொள். மிளகுகள் மிகுந்து வளரும் வளப்பமுடைய மலைநாட்டார் செய்த நோய்தான் இது என்பதை உணர்ந்து கொள்ள முடியாத நம் அன்னை 'இது தெய்வக்குறை' என்றெண்ணி, வெறியாடலை விரும்பி வேலன் வரட்டும் என்று சொல்லிவிட்டாள்."

"எனக்கென்னவோ தோழி, இது வெறும் கேலிக்கூத்தாகவே முடியும் என்றுதான் தெரிகிறது. ஆலமர் செல்வன் புதல்வனை அழைத்து உன்நோய் களைவதாகக் கூறி வருகிறான் வேலன். அவன் மடமையை நாம் எங்ஙனென்று சொல்வது! வேலனா மடமோ மடவன்? அவன் வேண்டுகோட்கிணங்கி வருவதாகக் கூறப்படும் ஆலமர் செல்வன் புதல்வன் (முருகன்) வேலனைவிட மடவனாகிவிடுவான்."

தலைவன் தன்னைவிட்டுப் பிரிந்தான்; உரைத்த உறுதிமொழி யின்படி வரத்தவறினன். தனக்குத் துன்பம் விளைந்த காரணத்தால் அவனைத் தெய்வம் ஒறுக்குமே என அஞ்சுகிறாள் தலைவி. தலைவன் தான் சொன்ன சொல்லின்படி வரத் தவறிய காரணத்தால் தெய்வத் தின் ஒறுப்புக்கு ஆளாக நேருமே என எண்ணி வருந்துகிறாள். அத ணால் தெய்வத்திடம் முறையிட்டுத் தன் காதலனுக்கு எந்த விதத் தீமையும் செய்யவேண்டாம் என்றும், அவன் கொடியனல்லன் அல் லன் என்றும் கூறி வேண்டுகிறாள். இவ்வாறு உண்மையான அன்பு கொண்ட மனமுடைய மங்கையர் பலர் இருந்தனர்.

"பூக்கமழ் கானலிற் பொய்ச்சூள் பொறுக்கென்று
மாக்கடல் தெய்வநின் மலரடி வணங்குதும்"

மன்னர்கள் நெறிதவறும் நிலையில் அவர்களை அன்பொடும், கடிந்தும் திருத்தும் புலவர்களைக்கொண்ட பெருமை தமிழ்நாட் டிற்கு உண்டு. மன்னர்களை அடுத்துப் பழகிய நண்பர்களும், புலவ ரல்லாத நிலையில் பரிசில் பெற்று வாழ எண்ணியோரும் இவ்வுரிமை யைக் கொண்டிருந்தனர்.

கனகவிசயர் தலைமீது கல்லேற்றி அவரைச் சோழபாண்டியர்க் குக் காட்டிவரப் பணித்தான் செங்குட்டுவன். அவர்களிருவரும் செங்குட்டுவனைப் பழித்து நகைத்தனர் என்பதைச் செவியுற்ற அவன் சினங்கொண்டெழுந்தான். அதனால் போர் நிகழுமோ என அஞ்சிய மாடலமறையவன் மன்னன் சினத்தைத் தணிவித்து அறத் துறையில் கருத்தைச் செலுத்தி என்றும் இறவாப்புகழ் பெறத் தூண்டினன்.

நாடகக்கலைக்கு அக்காலத்தில் மிக உயரிய சிறப்பு இருந்தது. அக்கலைக்கு மாசு நினைப்போரை ஒறுக்கும் முறையும் இருந்தது. மாதவியின் முற்பிறப்பைக் கூறும் முகத்தான் ஆசிரியர் நாடகக் கலைக்கு இருந்த உயர்வினைக் கூறுகின்றார்.

# மாம்பழக்கவி—சிலபாடல்கள்-2

பண்டித ரா. திம்மப்பையர், ஓய்வுபெற்ற விரிவுரையாளர், சேலம் கல்லூரி.

## குமரனந்தாதி

பதங்கா தலங்குறவஞ்சி கயவர்தம் பாற்சொலிச்சர்
ததங்கா தலங்குற வாக்குமம் மாதரைச் சார்ந்துடலம்
வதங்கா தலங்குற நற்போதந் தந்தெனை மாசடரா
விதங்கா தலங்குற ளாயளந் தோன்றொழு மெய்ப்பொருளே.—

(இ-ள்.) மூவுலகங்களை வாமனவடிவுகொண்டு ஈரடியாலளந்தோனாகிய திருமால் தொழத்தக்க தத்துவப்பொருளாகிய முருகமூர்த்தியே! பதம், காதல், அழகிய குறவஞ்சி (என்று சொல்லத் தக்க நூல்களை) (பொருள்வளமறியாத) அற்பரிடத்துச் சொல்லி எப்பொழுதும் தமது காதலின்பத்தால் (கண்ட அக்கணத்தே மாந்தரைத் தம்மிடம்) உறவாகச் செய்கின்ற அத்தகைய பெண்டிரையடைந்து உடல் (பலபடியாக) வதங்காமலிருக்கும் வண்ணம் (என்பால்) இரக்கம் பொருந்தச் சிறந்த ஞானத்தைத் தந்தருளி என்னைக் குற்றங்கள் (சிறிதும்) நெருங்கி வருத்தாவகை காத்தருள்வாயாக. (எ.று.)

குறிப்பு:— ஈண்டுக் குறித்த குமரனந்தாதிச் செய்யுட்களில் முதலெழுத்து நீங்கலாக ஏனைய எழுத்துக்கள் நான்கடியிலும் (சிலசீர்கள் வரையில) ஒரேமாதிரி வந்து, வெவ்வேறு வகையாய்ப் பொருளளவில் பிரிந்து நின்று உரைகொள்ளக் கிடந்தனவாகலின் இவை திரிபணிக் குதாரணமாதல் கண்டுகொள்க.

## சிவகிரியமகவந்தாதி

வந்தளந் தங்க வலையறச் செய்கிலர் மாய்த்தனர்த
வந்தனக் தங்க லணிநிதம் பந்தரு மாதர்பற்று
வந்தனந் தங்க மடமட்டு வாருய்வகை யெவன்கொல்?
வந்தனந் தங்க வயல்சூழ் சிவகிரி வாழ்பவனே.—4.

(இ-ள்.) அன்னப்பறவைகள் வந்து தங்கும்படி (சுற்றுப்புறத்திலும்) வயல்கள் சூழப்பெற்ற சிவகிரியென்னும் திவ்யதலத்தில் நித்யவாசஞ் செய்யும் முருகப்பிரானே! (இவ்வுலக மாந்தரிற் சிலர் (நின் திருவடிகளிற் றமது வந்தனங்கள் நிலையாகப் பொருந்துமாறு, பாசவலையை யறவே நீக்கச் செய்கின்றார்களில்லை; (பாசவழியிற் புகுதலால்) தமது தவவொழுக்கத்தைப் போக்கிக்கொண்டார்கள்; திரவி

யத்தின் பொருட்டுப் பொன்னாபரணங்களை யணிந்துள்ள தமது அல்குலை விலையாகத்தருகின்ற பெண்டிரது காதலை மிகமகிழ்ந்து (இன்பந் துய்த்து இங்ஙனம்) எல்லையற்ற கபடத்தொழில்களைச் சம்பாதித்துக் கொள்கிறார்கள். (இத்தகைய தீ நெறியிற் புக்கவர் இனி ஈடேறும் வகை யெப்படியோ? (எ-று.)

குறிப்பு:—இச்செய்யுளில் 'வந்தனந்தங்கவ' என்னுந் தொடர் நான்கடியிலும் ஒரேமாதிரி பயின்று, பொருளமைதியை நோக்க வெவ்வேறாகப் பிரிவுபட்டு வெவ்வேறு பொருள்களைத் தந்து நின்றதால் இது யமகவணிக்குதாரணமாயிற்று.

சுகந்த வரும்பழ கார்தன வள்ளி சுகம்பெறக்கொஞ்
சுகந்த வரும்பழ முண்டு பைங் காவிற் சுருதிகளஞ்
சுகந்த வரும்பழ கப்பன் சிவகிரித் துங்கநன்னெஞ்
சுகந்த வரும்பழ வல்வினை தீர்த்தரு ளேமதியே—32

(இ-ள்.) நறுமணம்வாய்ந்த அரும்பினழகமர்ந்த தனங்களுடைய வள்ளியம்மையாரது இன்பத்தைப் பெறும்படி(அத் தேவியாருடன்) கொஞ்சுகின்ற கந்தனே! பசுமையாகிய சோலையில் (மரக்கிளைகளில்) வளர்ந்துள்ள பழங்களைப் (பசுதீர) உண்டு அழகிய கிளிகளும், தவசிகளும் (குமரனைக் குறித்துத் துதியாகச்) சுருதிகள் பயில்வதற்குரிய அப்பனே! (தொண்டரது) சிறந்த மனத்திற்குப் பாங்கான சிவகிரியிற் (கோவில்கொண் டெழுந்தருளியுள்ள) உயர்வானவனே! நினது புனிதமான ஞானத்தால் (அடியேனது) தீர்த்தற்கரிய பழையனவாகிய கொடிய வினைகளைப்போக்கி யருள்வாயாக. (எ-று.)

குறிப்பு:—மூன்றாமடியில் சுகம் என்ற இடத்து உம்மைவிகாரத் தாற் றொக்கது. அப்பன், துங்க விளிப்பெயர்கள், இச்செய்யுளில் 'சுகந்த வரும்பழ' என்ற தொடர் நான்கடியிலும் முதற்கண்பயின்று பொருளமைதியை நோக்கி வெவ்வேறாகப் பிரிந்து பலவேறு பொருள் களைப் பயந்ததனால் இது யமகவணிக்குதாரணமாயிற்று.

## பழனிநான்மணிமாலை

### கலித்துறை

பவங்கண நோயு மணுகாது வஞ்சம் படர்ந்தமது
பவங்கண லார்கொடும் பாசஞ்செல் லாதுபைந் தேன்மணிரம்
பவங்கண மார்செய் வினையும் பழனிப் பரனருளின்
பவங்கண னீன்ற குகன்றன் மனத்துள் வைப்பாரகத்தே

(இ-ள்.)—பசுமையாகிய தேன் நிரம்ப அங்கு நெருங்கிப்பாய்தலால் மார்பு வரையில் வயல்களில் (நெற்பயிர்கள்) விளைதற்குக்காரணமாகிய பழனியிலுள்ள மேலானவனும் அருளின்பவடிவினனாகிய அழகிய சிவகணங்களைக் கொண்ட சிவபிரான் பெற்றருளிய குகன் என்னுந்திருநாமமுடையவனுமாகிய எம்பிரானது திருவடிகளை மனத்துள் வைத்துத் தியானிக்குமடியார்களது உள்ளத்தின்கண் கணநேரமாயினும் பிறவி நோய் நெருங்காது; வஞ்சனை பொருந்திய வண்டுகள் போன்ற அழகிய கண்களைக் கொண்ட மாதர் தம் கொடிய காதற் பிணிப்புச் சற்றுஞ் செல்லவேமாட்டாது (எ-று.)

குறிப்பு:—'பவங்கண' என்ற சொற்றொடர் இக்கவியின் நான்கடியிலும் முதற்கண்பயின்று வெவ்வேறாகப் பிரிவுபட்டு வேறு வேறு பொருள்கொள்ளக் கிடைத்தமையின், இஃது மடக்கணியாம். மார் - மார்பு என்றதன் விகாரம். மதுபம்-வண்டு 'நோயும்' என்பதிலுள்ள உம்மை பிரிக்கப்பட்டுக் 'கணம்' என்ற சொல்லோடு பிணைக்கப்பட்டது.

வெண்பா

மோகமட மானார் முதிமயல்விட் டுய்யநெஞ்சே!
மாகமட மானார் மருகனிகழ்—வாகியமுப்
பாத கமலம் பவமிகந் தோர்பாலுறைவேள்
பாத கமலம் பணி—செய். 21

(இ-ள்.)—மோகத்தை விளைக்கின்ற இளையமான்போன்ற மாதரது மிக்க காமமயக்கத்தை யொழித்து ஈடேறுதற் பொருட்டு, மனமே! அழகிய கூர்மாவதாரமெடுத்த திருமாலின் மருகனும்; இகழ்ச்சியுற்ற பாதங்களாகிய மும்மலங்களையும், பிறவியினையும் (பூண்டோடு) ஒழித்தவர்களாகிய பெரியோரிடத்து (நீங்காமல்) நித்ய வாசம் செய்பவனுமாகிய (யாவராலும் விரும்பத்தக்க கட்டழகுடைய) முருகமூர்த்தியினது இருபாதங்களாகிய பத்மங்களை வணங்குவாயாக, (எ-று.)

குறிப்பு:—இச்செய்யுளின் முன்னிரண்டடிகளில் முதலெழுத்து நீங்கலாக ஏனைய சிலஎழுத்துக்கள் ஒன்றிவந்து, பொருள்கொள்ளுங்கால் வேறாகப் பிரிந்து உரைகொள்ளக் கிடந்தமையின் திரிபணிக்குதாரணமாயின. முன்னிரண்டடிகள் பின்னிரண்டடிகளில் 'பாதகமலம்' என்னுந்தொடர் அமைந்து இரண்டடிகளிலும் வெவ்வேறாகப்பிரிவுண்டு பொருள் தந்தமையின் மடக்கணி தோன்றுதல் கண்டுகொள்க. மும்மலம்-ஆணவம், கன்மம், மாயை. இருவினை-நல்வினை, தீவினை,

# தமிழர் சமயம்

—:(-:0:-):—

சித்தாந்த கலாநிதி-பேராசிரியர், ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை, மதுரை.

பழந்தமிழர் என்பது பழமையான காலத்துத் தமிழர்கள் மேற்கொண்டிருந்த சமயம் என்பதுதான் கருத்து. பழமையான காலம் என்பது இமயப்பகுதியில் வேதநெறி நிலவியிருந்த அந்தப் பழமையான காலத்தோடு ஒப்பிட்டு நோக்கலாம். பழந்தமிழர் மேற்கொண்டிருந்த சமயத்துக்கும் வைதீகசமயத்துக்கும் அடிப்படையில் வேறுபாடுகள் இருந்தன. வைதீக சமயத்துக்கு வேதங்களைப் போல் தமிழர் சமயத்துக்குப் பழங்கால சங்க இலக்கியங்களும் தொல்காப்பியமும் சான்றுகளாக இருக்கின்றன. தமிழர் சமயத்துறையில் கடவுள் ஒன்றென்பதும் தெய்வங்கள் பலவுண்டென்பதும் காணப்படுகின்றன. வைதிக சமயத்தில் தெய்வங்கள் உண்டேயன்றி கடவுளில்லை. பழந்தமிழர் இடையே வினையுணர்வும் மறுபிறப்பும் சமயக் கொள்கையின் அடிப்படையாக விருந்தன. வேத நூல்களில் வினையுணர்வு கிடையாது. இவ்வகையில் பழந்தமிழர் சமயம் வைதிக சமயத்தினின்றும் அடிப்படைக் கொள்கையிலேயே வேறுபட்டிருந்தது. கடவுள் ஒன்றென்பதும் உயிர்கள்பலவென்பதும் உலகம் உயிர்களின் பொருட்டுக் கடவுளால் படைக்கப்பட்டதென்பதும், தமிழர் சமயக் கொள்கை. உயிர்கள் கடவுளைப் போல் 'என்றுநீ அன்று நான்' என்ற முறையில் படைக்கப்படுவதும் அழிக்கப்படுவதும் இல்லாதவை. உயிர்கள் நல்வினை செய்து துறக்கம் பெறுவதும் தீவினைசெய்து நரகம் புகுவதும் இயல்பு. நல்வினையால் உயர்ந்த உயிர்கள் துறக்கவாழ்விலும் சிறப்புடைய தெய்வங்களாக அமைவதுண்டு. கடவுளுக்கும் உயிர்களுக்கும் இடையே இத்தெய்வங்கள், கடவுளின் ஆணைவழி நின்று இயற்கையில் தங்கி உயிர்கள் செய்யும் வினைகளுக்கேற்ற இன்பதுன்பங்களைக் கொடுக்கும். அதனால் அத்தெய்வங்களைப் பால்வரை தெய்வம் என்று பழந்தமிழர் குறித்தனர். இத்தெய்வங்களும் பிறப்பு இறப்பு உடையவை.

குறிஞ்சி முதலாகவுள்ள ஐவகைத் திணைகட்கும் ஐவகைத் தெய்வங்களுண்டு. குறிஞ்சிக்கு முருகனும், முல்லைக்குத் திருமாலும், பாலைக்குக் கொற்றவையும், மருதத்துக்கு இந்திரனும், நெய்தலுக்கு வருணனும் தெய்வமாவர்; இவைகள் கடவுள் ஆணைவழி நின்று நின்று இயற்கையில் கலந்து மழை, மின்னல், இடி முதலிய இயற்கை நிகழ்ச்சிகளை இயக்குபவை என்று பழந்தமிழர் கருதினர். இந்த ஐந்து நிலங்களுக்கும் பொதுவாய், இத் தெய்வங்களுக்கெல்லாம் மேலாய், ஒன்றாய், வேறாய், உடனாய் இருப்பது கடவுள் என்ற முழு முதற்பொருள். அஃது உயிருள்ள பொருள் உயிரில்லாப் பொருள் ஆகிய எல்லாப் பொருட்களின் இயக்கத்துக்கும் உள்ளீடாய் இருப்பதனால் இயவுள் என்றும் வழங்கும்.

முன்னே சொன்ன தெய்வங்களின் செயல்களைப்பற்றிய செய்திகள் பழந்தமிழர் வாழ்வில் காணப்படுகின்றன. முருகன், சூர்முதல் தடிந்ததும் மாயோன் கம்சன் முதலிய கொடியவர்களை அழித்ததும் பிறவும் பழந்தமிழர் சமயக்குறிப்பில் காணப்படுகின்றன. தமிழர் வாழ்வில்கண்ட வினையுணர்வும் மறுபிறப்பும் வேதங்களுக்குப் பின்னே தோன்றின உபநிடதங்களில் கலந்துகொண்டபிறகு இதிகாச புராணங்கள் வைதிகநெறியில் தோன்றின. இடைக்காலத்தே பழந்தமிழர் சமயமும் வைதிகசமயமும் கலந்து கொண்டன. அதனால் பௌராணிக சமயம் தோன்றிற்று. அதுதான் இன்றுவரையில் நிலவி வருகிறது.

கடவுள்வழிபாடு கந்துடை நிலை வழிபாடாகப் பழந்தமிழர் வாழ்விலிருந்தது. கந்துடை நிலையென்பது பின்னர் சிவலிங்கம் என்ற பெயர் பெற்றது. கந்து லிங்கமெனவும் அதன் நிலை பீடமெனவும் வடநூற்களில் குறிக்கப்பெற்றன. எல்லாச் சிவன்கோயில்களிலும் அந்தக்கடவுளைக் குறிக்கும் கந்துடை நிலை நடுவிலும், குறிஞ்சி முதலிய நிலங்களுக்குரிய தெய்வங்கள் அதைச் சுற்றிலும் அமைந்திருப்பதே இதற்குத் தக்கசான்று.

பிற்காலத்தே பௌராணிக சமயம் நாட்டில் செல்வாக்குப்பெற்றது. அதனால் கடவுள் வழிபாட்டிலும், பலதெய்வங்களின் வழிபாடு சிறப்பிடம்பெற்றது. கடவுள் நிலைக்கும் கை கால் முகங்களோடு கூடிய தெய்வநிலை கற்பிக்கப்பட்டது. கோயில்களிலும் விழாக்களிலும் பௌராணிகக் குறிப்புக்களே முதலிடம் பெற்றன. நாட்டில் பௌராணிகத்துக்குச் சிறப்பும் செல்வாக்கும் மிகவே பௌராணிக நெறியில் தெய்வங்களை மக்களினும் கீழான ஒழுக்கமுடையவர்களாகக் காட்டும் கதைகள் பலபுனைந்து காட்டப் பட்டன. அதனால் மக்களிடையே தெய்வங்கள்பால் தோன்றியிருந்த நன்மதிப்புச் சிறிது குன்றத் தலைப்பட்டது. தெய்வவழிபாடு மிகுந்தும் கடவுள்வழிபாடு குறைந்தும் வந்தது கண்ட சான்றோர் சிலர் கடவுள் வழிபாட்டை வற்புறுத்தினர். என்றாலும் பௌராணிகத்தின் முன் அவர்கள் முயற்சி வெற்றி பெறவில்லை. பிற்காலத்தே வேற்று நாட்டவர் தொடர்பாலும் விஞ்ஞான அறிவு வளர்ச்சியாலும் மக்களுயிர் இயற்கையை வென்று அதனைத் தான் விரும்பியபடி ஆட்டிவைக்கும் ஆற்றல் உடையது என்பது தெரிந்தபின் தெய்வங்களையும் அவற்றின் செயல் முறைகளைப் பேசும் பௌராணிகத்தையும் மக்கள் புறக்கணிக்கத் தலைப்பட்டனர். அதனால் தெய்வநம்பிக்கையும் தெய்வ வணக்கமும் மக்கள்மனதில் தேயத்தலைப்பட்டன. ஆனால் கடவுள் ஒருவருண்டென்ற பழந்தமிழர் சமயக்கொள்கையும் அவரை அன்போடு வணங்கி வழிபட்டு வாழ்வது என்ற சமய ஒழுக்கமும் ஆங்காங்கு அரும்பிக்கொண்டுவருகின்றன. இன்று கற்றவர் கல்லாதவர் எல்லாருடைய உள்ளத்திலும் கடவுள் நம்பிக்கையும் கடவுள் வழிபாடும் இடம் பெற்று வருகின்றன. ஒரு காலத்தில் விளக்கமுற்றிருந்து இடைக்காலத்துப் பௌராணிகத்தால் ஒளியிழந்து செல்வாக்கு இழந்திருந்த பழந்தமிழர் சமயம் இன்று சிறப்புப் பெற்று வருவது பெரிதும் வரவேற்கத்தக்கது.

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

## I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம் ... ... | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) ... ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீ கிருஷ்ணசரித்திரவிமர்சம் ... ... | 1 | 4 | 0 |
| 17. | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| 2. | கனுதல் (5) இனியநாற்பது (உரை) ... ... | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... ... ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் ... ... ... | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் ... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பகமூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா ... ... ... | 0 | 8 | 0 |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை ... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை ... ... ... | 0 | 8 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 32. | மனீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 40. | திருப்பிருஞ்சே[illegible] | | | |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ... | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு... ... ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 67. | அமிர்தரஞ்ஜனி ... ... ... | 0 | 2 | 0 |
| 69. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ... | 0 | 8 | 0 |
| 70. | திருச்சிறுபுலியூருலா ... ... ... | 0 | 12 | 0 |
| 71. | துணைத்தலைவர் நினைவுமலர் ... ... ... | 0 | 10 | 0 |

1. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டுவெளியாகிவரும் இச் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4-8-0. இதுவரை 51 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and Published by T. N APPAN IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.